இறக்குமதி செய்யப்பட்ட
பலவித பரிசுப் பொருட்கள்
கழுத்தணிப் பொருட்கள், தைல
வேலைகளுக்குரிய சகல பொருட்கள்,
மற்றும்
யப்பான் நாட்டிலிருந்து இறக்கு
மதி செய்யப்பட்ட பல தரங்களிலு
முள்ள காதணிகள் கழுவிகள் நாக
நிறையும் மலிவான விலையில் பெற
நல் கொள்ள இன்றே நாடுங்கள்.
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE
சோமுடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்
தொலைபேசி 8083

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர் 21 ஐப்பசி 16 ஜுல்ஹஜ் 11 இதழ் 263
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-11-79

சைவபோசனகாரர் மனதில்
என்றும் நிலைத்திருப்பது
தேவி விலாஸ்
சுத்தம், சுவை, சுகாதாரம்,
அன்பான உபசரிப்பு!
விஜயம் செய்யுங்கள்
தேவி விலாஸ்
(யன்னைச் சேவல்கோவில் சந்தி)
288, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

பொலிவியாவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது?

ஜனாதிபதியின் நிலைமைபற்றி சரியான தகவல் இல்லை

லண்டன், நவ. 1

பொலிவியாவில் இராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ளது?

இன்று அதிகாலையில் ராணுவ அபிமானப் பிரிவொன்றின் சேனைத் தலைவரின் தலைமையான புரட்சிப்படைகள் ஜனாதிபதி குவோரா ஆர்ஸாவின் மாளிகையை முற்றுகையிட்டு நம்வசப்படுத்திக் கொண்டார்கள் அரசாங்கக் கட்டிடங்கள் பலவற்றையும் புரட்சிப் படைகள்கைப்பற்றியுள்ளன ஜனாதிபதியின் கொடுங்கோன்மையை ஒழிப்பதற்காகவே இந்தராணுவப் புரட்சியை நடத்தியதாக புரட்சிக்குப் பொறுப்பாக இருந்த சேனைத் தலைவர் தெரிவித்தார்.

அதிபர் குவோராவுக்கு என்ன நடந்தது என்பது பற்றி உடனடியாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால்புரட்சி ஒன்றும் பெரிதாகநடக்கவில்லை வெற்றி ஒருசிறு கோஷ்டியினரே குழப்பம் விளைவித்தார்கள்என அதிபர் குவோரா தெரிவித்துள்ளதாக அமெரிக்க செய்தி ஸ்தாபனம் ஒன்று அறிவித்துள்ளது.

யாழ். லயன்ஸ் மரநடுகை வாரம்: இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை லயன்ஸ் மாவட்ட ஆளுநர் டாக்டர் டபிள்யு ஏ பேர்டினன்ட் நவம்பர் மாதம் முதல் வாரத்தினை 'மரநடுகை பிரசார வாரம்' எனப் பிரகடனப் படுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் பிரதமர் திரு ஆர் பிரேமதாசா கொழும்பில் மரநடுகையுடன் இவ் இயக்கத்தினைத் தொடக்கி வைத்தார்.

யாழ் லயன்ஸ் மாவட்டத்தினரின் மரநடுகையான இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் மாநகரசபைமேயர் திரு ஆர் விசுவநாதன் மாநகரசபைக் மற்ற வளவில் இப்பிரதேசத்தில் மரக்கன்றுகளை நாட்டி வைப்பார்.

இந்நிகழ்வுக்கு யாழ் லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் எஸ் சபாரத்தினம் தெரிவித்தார்.

ரயில் தண்டவாளத்தில் விழுந்த குழந்தை

உயிர் தப்பிய அதிசயம்!

புதுடில்லி, நவ 1

ஓடும் ரயிலிலிருந்து தண்டவாளத்தில் விழுந்த குழந்தை, ஆறு மணித்தியாலங்களின் பின்னர் உயிருடன் கண்டெடுக்கப்பட்டது.

ஓடிக்கொண்டிருந்த ரயில் ஒன்றில் பெண்பிரயாணி ஒருவர் பிரசவித்தார் பின்னர் அவர் மயக்கமடைந்தார் அந்த சமயத்தில் குழந்தை ரயிலில் இருந்து உருண்டு கீழே விழுந்துவிட்டது. நெய்வாதினமாக இரண்டு தண்டவாளங்களுக்கிடையில் விழுந்துவிட்ட கிசு அப்படியே ஆறு மணி நேரம் கிடந்துள்ளது அதற்குள் ஏழுமரங்கள் அதன் மீது ஏறி [illegible] பிறகே ரயில்வே அதிகாரிகள் அக்குழந்தையைக் கண்டு பிடித்தார்கள் குழந்தை எதுவித ஆபத்துமின்றிக்கிடப்பதைக்கண்ட அதிகாரிகள் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று ஒப்படைத்தார்கள்.

வடஇந்தியாவில் இதுநடந்துள்ளது.

பரீட்சைத் திணைக்களம்

ஊழல் நிறைந்த இடமாம்

நல்லூர் எம். பி. சாடுகிறார்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களம் ஊழல் நிறைந்த ஒருஇடம் அது எமது மாணவர்களின் கல்விக்கு மாசுகற்பிக்கிறது. திறமைக்கு முதலிடம் கொடுக்கத்தவறியவர்கள் எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு தரப்படுத்தல் என்ற ஆயுதத்தைப்பாவித்து முட்டுக்கட்டைபோட்டுள்ளனர்.

யாழ் கலைரெத்தினம் ம. வித்தியாலயத்தில்நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய நல்லூர் எம். பி யும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு ஜே எல் அரியரெத்தினம் தலைமையில்நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திரு சிவசிதம்பரம் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

திரு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அறுபதாம் ஆண்டுவரை பல்கலைக் கழகப் பரீட்சையில் போட்டி நிலவியது அதனால் அக்காலத்தில் திறமையாளிகளே பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் வெளியான தமிழ் மாணவர்களே இன்னும் உயர் பதவிகளில் இருக்கிறார்கள் எழுபதாம் ஆண்டுபின் தரப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டு தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அதனால் திறமையிருந்தும் தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குள் கூடுதலாகச்செல்ல முடியாதநிலை ஏற்பட்டது

இன்றைய அரசாங்கம் ஆட்சி ஏற்றதும் தரப்படுத்தல் நீக்கப்பட்டது அதனால் தமிழ் மாணவர்கள் கூடுதலாகப் பல்கலைக் கழகம்செல்ல வாய்ப்புஏற்பட்டது அதனால் மீண்டும் தரப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்மாணவர்களின் பல்கலைக் கழகப் பிரவேசத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்று நிறமைச் சித்திகள் பெற்ற யாழ் ம. வலயத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக் கழகப் பிரவேசத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை சாதாரண சித்தி பெற்ற வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதி வழங்கப்பட்டுள்ளது இந்தநிலை வேறு எந்த நாட்டிலும் ஏற்பட்டதில்லை.

குளிருட்டப்பட்ட களஞ்சிய அறை

அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் விற்பனைத் திணைக்கள குளிருட்டப்பட்ட களஞ்சிய அறைக் கட்டிட அடிக்கல் நாட்டுவிழா இன்று காலை அச்சுவேலியில் நடைபெறுகிறது

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான மரக்கறி, பழவகைகளைப் பாதுகாத்துவைக்க குளிருட்டப்பட்ட அறைகளைக் கொண்ட இந்தக் களஞ்சியக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட அரசாங்க செயலாளரும், அரச அதிபருமான திரு வேலாயுதராஜா துரைசுவாமி நாட்டிவைப்பார். (மு)

ஆசிரியர்கள் தங்கள் தொழிலைத் தொழில் என்று எண்ணிச் செயல்படாது அறப்பணி என எண்ணி தமது கடமையாற்றி நல்ல அறிவாளிகளை உருவாக்கிப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பும் முறையில் ஈடுபடவேண்டும் அதேவேளை மாணவர்களும் தமது கல்வியில் கூடிய கவனம் செலுத்தி டாக்டர்களாகவும் தொழில் நுட்ப வாதிகளாகவும் வெளிவர இடமளிக்கப் பணவேண்டும்.

பல்கலைக் கழகம் சென்றுவிட்டாலும் வேலைதேடிக்கொள்வது மிகவும் கடினமாக உள்ளது ஆகவே பாடசாலையில்

(6-ம் பக்கம் பார்க்க)

ம. பொ. சி. நேற்று கொழும்பு வந்தார்

'அமிர்' மற்றும் பிரமுகர்கள் வரவேற்றனர்

(கொழும்பு)

தமிழ்நாடு மேலவைத் தலைவர் திரு ம பொ சிவஞானம் கிராமணியார் நேற்று மாலை மீனாக்ஷி மார்க்கமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினார். எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், இ தொ கா பொதுச்செயலாளர் திரு எஸ் செல்வச்சாமி ஆகியோர் அவரை பிரமுகர்கள் கூடத்தில் வைத்து வரவேற்றனர்.

விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் பேசிய மா பொ சி இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியத் தமிழரின் ஆர்வமார்த்தமான ஆதரவு எப்போதும் இருக்கும் என்றார்.

இந்தியத் தேர்தல் பற்றிக் குறிப்பிட்ட அவர் தமிழக முதல்வர் எம் ஜி ஆரின் படம் லேசானதல்ல என்றார்.

திருமண வைபவமொன்றில் கலந்து கொள்ள இங்கு வந்துள்ள திரு வெங்டாசலக்கிராமணியார் நாளை நாடுதிரும்புவார். (ம)

ஐஸனோவர் காலமானார்

நியூயோர்க், நவ. 1

முன்னாள் அமெரிக்க அதிபர் ஐஸனோவரின் பாரியார் திருமதி ஐஸனோவர் தமது 82 வயதில் இன்று காலமானார்.

"தமிழகத்தவர்களிலும் பார்க்க

தமிழைப் பேணுவதில் நாம் குறைந்தவர்கள் அல்ல'

சௌந்தரராஜன் இசை நிகழ்ச்சியில் 'அமிர்' பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்கள் தமிழைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் தமிழகத்தவர்களிலும் குறைந்தவர்களல்ல எனது எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் கூறினார்

கிறுப்பிட்டி அருள்மிகு செல்லப்பிள்ளையார் கோவில் நிதிக்காக யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற பிரபல தென்னிந்திய நிரைப் படப்பாடகர் கலைமாமணி சி

(2- பக்கம் பார்க்க)

குளிர்சாதன பண்டகசாலை இன்று கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி குளிர்சாதன பண்டகசாலைக்கான அடிக்கல்லை இன்று காலை யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு வேலுப்பிள்ளை நாகேந்திரா துரைசுவாமி நாட்டவுள்ளார். இவ்வைபவத்தில் யாழ் விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. பாலசிங்கமும் கலந்துகொள்ளுவார்.

யாழ்ப்பாண மக்களின் விலைபொருட்களான பழவகைகள், மரக்கறிவகைகள், வெங்காயம், உருளைக்கிழங்குபோன்றவையே இங்கு சேமித்து வைக்கப்படும்.

வடபகுதியில் முதன்முதலாக அமைக்கப்படவுள்ள இக்குளிர்சாதனப் பண்டகசாலையினால், வடபகுதி விவசாயிகள் பெருமளவு பயனடையவுள்ளனர்" என்று யாழ் மாவட்ட விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. பாலசிங்கம் தெரிவித்தார். (செ)

"சமூகத்தைப் புறக்கணித்து தனிமனிதவளர்ச்சியால் எவ்வித நன்மையுமில்லை"

(புகுமுகுதேவு)

"ஒருங்கிணைந்த சமுதாயத்தை வளரானதாக அமைக்கவேண்டிய பாரியபொறுப்பு இளைஞர்களையே சாரும். இத்தகைய மிகப்பெரும் பொறுப்பையேற்கும் வாலிபசமுதாயம், சமுதாய நலனில் அக்கறைகொண்டதாக, பொறுமை உணர்வுகளுக்கு இடமளிக்காததாக, பதவிப்போட்டிகளிலீடுபடாததாக அமையவேண்டும் தேர்மையுடன் நீதியுமேலோங்கி வெற்றிதரவல்லன. கிராமமும் சமூகமும் வளர்க்கப்படும்போது நாமும் வளர்கிறோம் என்பதை அனைவரும் உணரவேண்டும். கிராமம் விழிப்புணர்ச்சி அற்றிருக்கும்போது தனிமனிதனின் வளர்ச்சி எதுவித நன்மையும் தரப்போவதில்லை. ஒன்றிணைந்த வாழ்வுக்கு வழிகாட்டி எவருக்கும் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் தரவல்லது எம்மவரை ஒன்றுபடுத்து உழைத்து சமுதாயத்தை முன்னேற்றப்பாடுபடவேண்டும்".

மற்றப்போட்டிச் செயலாளர் திரு. ந. இராஜதுரை ஆசிரியர், வ. சந்தானசாமி, வ. சிவானந்தராசா ஆகியோரும் பேசினர்.

புதுவருடத்திய கிராமதரைப் பணிகளின் போது, புகுமுகுதேவு பாணுக்கிடைச் செல்வி ஆலயம் சம்பந்தப்பட்ட கிராமதரைப் பணிகளுக்கு மற்றக் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. (சி)

தமிழைப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எம் சௌந்தரராஜன், எம் லிதா குழுவினரின் இசை நிகழ்ச்சியில் இறப்புச் சொற்பொழிவாற்றுகையிலே திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு மகேந்திரன் மேலும் பேசிய தாவது: சாதி, மதபேதமற்ற சமூக அமைப்பு உருவாக்கப்படவேண்டும். மனிதசமுதாயத்தின் மத்தியில் பேதங்களை வளர்ப்பது பேதமையே சமூகத்தை முன்னேற்ற முனைகின்றவர்கள் தன்மையுந் தூய்மையுமுடையதாகவேண்டும். மதுவிலக்குப் போன்ற சொல்லைக்கேட்டதும் இதயத்திருத்தி இளைஞர்கள் செயற்படவேண்டும். மது அரக்கனின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிகின்ற ஒரு பகுதிச் சமுதாயத்தை சீர்திருத்த, நல்வழிப்படுத்த நாம் முயல வேண்டும்".

மற்றப்போட்டிச் செயலாளர் திரு. ந. இராஜதுரை ஆசிரியர், வ. சந்தானசாமி, வ. சிவானந்தராசா ஆகியோரும் பேசினர்.

"சமூகத்தைப் புறக்கணித்து தனிமனிதவளர்ச்சியால் எவ்வித நன்மையுமில்லை"

(புகுமுகுதேவு)

"ஒருங்கிணைந்த சமுதாயத்தை வளரானதாக அமைக்கவேண்டிய பாரியபொறுப்பு இளைஞர்களையே சாரும். இத்தகைய மிகப்பெரும் பொறுப்பையேற்கும் வாலிபசமுதாயம், சமுதாய நலனில் அக்கறைகொண்டதாக, பொறுமை உணர்வுகளுக்கு இடமளிக்காததாக, பதவிப்போட்டிகளிலீடுபடாததாக அமையவேண்டும் தேர்மையுடன் நீதியுமேலோங்கி வெற்றிதரவல்லன. கிராமமும் சமூகமும் வளர்க்கப்படும்போது நாமும் வளர்கிறோம் என்பதை அனைவரும் உணரவேண்டும். கிராமம் விழிப்புணர்ச்சி அற்றிருக்கும்போது தனிமனிதனின் வளர்ச்சி எதுவித நன்மையும் தரப்போவதில்லை. ஒன்றிணைந்த வாழ்வுக்கு வழிகாட்டி எவருக்கும் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் தரவல்லது எம்மவரை ஒன்றுபடுத்து உழைத்து சமுதாயத்தை முன்னேற்றப்பாடுபடவேண்டும்".

மற்றப்போட்டிச் செயலாளர் திரு. ந. இராஜதுரை ஆசிரியர், வ. சந்தானசாமி, வ. சிவானந்தராசா ஆகியோரும் பேசினர்.

புதுவருடத்திய கிராமதரைப் பணிகளின் போது, புகுமுகுதேவு பாணுக்கிடைச் செல்வி ஆலயம் சம்பந்தப்பட்ட கிராமதரைப் பணிகளுக்கு மற்றக் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. (சி)

இசையாளரை அறிவோம்; எம்.கே. தியாகராஜபாகவதர் இன்று நினைவு நாள்

இன்றைய திரைப்பட உலகில் தலைசிறந்த பாடகர்களாகத் திகழுவோர் எம்.கே. தியாகராஜ பாகவதரை விஞ்சிவிடுவோர்களுண்டா. ஏ நாடக சங்கீத உலகில் தனக்கென ஓர் அழியாத இடத்தைப் பெற்றுக்கொண்டவர் தியாகராஜ பாகவதர் இதனுடனொரு பெயர் குறிப்பிடவிருப்பினும் சிவனப்பா பாகவதரைச் சுட்டலாம். மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெறும் முத்திரைப் பாடல்களைப் பாடியவர் எம்.கே. தியாகராஜபாகவதர்.

ஒருவர் சங்கீத ஞானம் உடையவரோ, மக்கள் கருகின்றனரோ அறியாமல் 'குரல்வளமுடையவர்' என்பதுவும் உள்ளூர நினைத்து வரவேற்கப்படும். தியாகராஜபாகவதரின் குரல்வளம் ஆண்களுக்கே இயல்பாகவுரிய குரல்வளமல்ல. அவரது குரலினிமையும் ஆண்களது குரலுக்குரிய தன்மையுங்கொண்டதல்ல. 'குரல்வளம்' தன் கொண்டபாகத் திகழ்வதென்று கருதாது இசை மரபு. இதனாலேயே இசை இறவாமலானது.

தியாகராஜபாகவதரின் முத்திரைப் பாடல்கள் அவர் தோன்றி நடித்த திரைப்படங்களான ஹரிதாஸ், அம்பிகாபதி, சோரமாதா, கப்பிரமணி, அசோக்குமார், சிவகவி, சத்தியசீலன், புதுவாழ்வு, சித்தரஞ்சனி, ராஜகுமாரி, ராஜமுக்தி ஆகிய படங்கள் மூலமாகவும் இன்னு தனிப்பாடல்களாலும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

ராமனே உனக்கு சோபமாகாதோடி, ஞானக்கண் ஒன்றிழந்தான்; சுடர்ப்பூ விழிச் சுடரிழந்தான் கண்ணனா, ஜீவப்பிரியை நீயாகவா என்ற 'ரடக்களும்;

காந்திவிக் பேரிக்;

காந்திமய போலொரு சாந்தசொரூபியைக் காண்பதுக் கரிதாமோ', வசுமாறு செய்வதுண்டோ, உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ— என்பன பாகவதரை என்றென்றும் நினைவுகூரப் போதுமானவை

'நாவன்னா'

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 16-உ திகதி

வெள்ளிக்கிழமை

(2-11-1979)

மேடம்: சிநேகித வழித் தொடர்பு ஏற்படும். வாக்கு வன்மையால் வெற்றியடைவீர்கள். நீண்டதூர உடல் தொல்லை இன்று நிவர்த்தி உருவாகும்.

இடபம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை உருவாகும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, மௌனம் நன்று.

மிதுனம்: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். கிளர் வாழ்க்கையில் வாகனம் ஒன்றுக் கோகிவளவு செய்யப்படலாம். முன்னேற்றமான தினம்.

கடகம்: புதிய பாதை வழி திறக்கும். இதயத்தில் இன்பமுண்டு. எதிர்பாராத வரவுக்குக் இடமுண்டு.

சிங்கம்: இடர்கள் பல தாக்கும். சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படும். எதிலும் முன்போசனை விரும்பத்தக்கது.

கன்னி: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கைத்திரவழியால் வரவுக்கிடமுண்டு. பெரியோர் ஆதரவு உண்டு. கண்ணியமான தினம்.

துலாம்: எதிர்பாராத விபத்திற்கு இடமேற்படலாம். சிந்தையில் குழப்பநிலை தோன்றக்கூடும். குடும்பத்தில் பிரச்னைகள் உருவாகும்.

விருச்சிகம்: பாக்கிய விருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும். நற்செயலில் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். விண்ணிய விருப்பும் மேலிடும்.

தனு: புதிய செய்தி யொன்று கிடைக்கக்கூடும். பொருள் விருத்திகிடமுண்டு. தொழில் வெற்றியுண்டு.

மகரம்: விவசாயத் துறையில் மந்தநிலை உருவாகும். உடல் தொல்லை எதிர்க்கக்கூடும். உடல் நலத்தைப் பேணி நடக்கவும்.

கும்பம்: வேண்டியவர் கண்ணப் பகைத்துக் கொள்ளுவீர்கள். வழக்கு விவகாரங்களில் ஈடுபடக்கூடும். அவசர புத்தியைத் தவிர்க்கவும்.

(6-உ பக்கம் பார்க்க)

வர் விளம்பரம்

விற்பனைக்கு

1210 பென்ஸ் லொறி நம்பர் 24 ஸ்ரீ4199. என்ஜின், ரயர், பொடியாவுள் நல்ல நிலையில் உள்ளது. விலை ரூபா 1,30,000/- மேல் பாரிவை விடும் விலாசம்: V. M. S., No 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3955

புதிய CD 185 கொண்டா மோட்ட மாஸ்டர் கோட்டாவுடன் 9 ஸ்ரீ 9577 விற்பனைக்குண்டு. சிவபாதசுந்தரமூர்த்தி, நவக்கிரி, புத்தூர். 3965

பிரபல்கூனர் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு விலை அறுபத்தைந்தாயிரம் ரூபாவுக்கு மேல் தொடர்பு: 16, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3996

பத்து வருடத்தமிழ் நூல் கோட்டாவுடன் (கிட்ஸ் நீட்) முதலியவற்றுடன் பாவிக்கக் கூடிய நிலையில் விற்பனைக்குண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 3983 மே/பா சமுதாடு, யாழ்ப்பாணம். 3983

பயிற்சி

தொழில் பயிற்சி: விசேஷ மாஸ்டேர வெல்டிங் பயிற்சி தொழில் புரிவோருக்கான ஐந்தாம் நிலை ஆரம்பமாகின்றது. வெளிநாடுகளில் தொழில் பெறுவதற்கு ஏற்ற முறையில் நடாத்தப்படும். தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம், 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 3968

கொக்குவில் இந்துக் கல்லூரி

பரிசளிப்பு விழா – 1979

காலம்: 5-11-79 திங்கட்கிழமை பி. ப. 4-30 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்:

திரு தி. மாணிக்கவாசகர் அவர்கள்

(கல்வி பணிப்பாளர், வடமாநிலம்)

பரிசு வழங்குபவர்:

திருமதி ஞா. மாணிக்கவாசகர்

தங்கள் குடும்பத்துடன் வருகைதரவேண்டுமென்று:

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்,

29-10-79. 3989

முக்கிய அறிவித்தல்

க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் (5) ஐந்து பாடங்களில் சாதாரண சித்தி பெற்றோரிடமிருந்து யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள சட்டம், கலை, வர்த்தகம் ஆகிய பாடநெறிகளைப் பயில்வதற்கான பயிற்சி நெறியைப் பயில்வதற்கு இப்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை 7-11-79க்கு முன்பாக நேரில் பெற்று விண்ணப்பிக்கவும்.

தேசிய கல்வி நிறுவனம்,

11, மொம்சாக் கட்டடம்,

ஸ்டான்லி வீதி, (3991) யாழ்ப்பாணம்.

அச்சுவேலிக் கூட்டுறவுப் பாண் சங்கம்

பணியாளர் தேவை

1 பாண் சுடுநர்

1 உதவிப்பாண்சுடுநர்

1 விற்பனையாளர்

வேதனம்: சம்பள நிர்ணய சபை விதிதப்படி வழங்கப்படும்.

மனுதார்கள் தகமைச் சான்றிதழ்களுடன் சங்கக்காரியதரிசிக்கு 10-11-79க்குமுன்பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 3995

வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்

0 நீடித்து உழைப்பதும்

0 தன்னிகரற்றதுமான

'றிவர்' பிரான்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம்

நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,

கொழும்பு--12

தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530

சிலை வைப்பு

யாழ். நகரில் வன்னியசிங்கத்துக்கு சிலையமைப்பதாக மாநகரசபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழினத்திற் தன்னலமற்ற தனிப்பெருந்தலைவர்களுள்ளும் சிலரை பதிக்க எவருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால் சிலையமைப்பதால் மக்கள் இலக்கியப்பணியை செம்மைப்படுத்துகிறோம் என்று நினைப்பது தவறு. எழுச்சிபெறுகிறோம் என்ற நினைவில் எத்தனையோ ஆக்கபூர்வமான பணிகளையும்-தேவைகளையும் புறக்கணித்துவிட்டு தற்போது கிடைவளமுக்கியத்துற்ற பணிகளிலேயே நாட்டத்தைச் செலுத்துகிறோம்.

இந்த இடத்தில் யாழ்ப்பாண மாநகரசபைக்கென வுள்ள பணிகளை எல்லாம் வரிசைபடுத்கூறவேண்டிய தேவை இல்லை. ஆனால் நமது சமுதாயத்தில் உள்ள கேவலமான சில நினைவுகளைச் சுட்டிக்காட்டுவது அவசியம் என நினைக்கிறோம். யாழ்ப்பாணப்பகுதிகளில் விசேடமாக கரையோர நிலைமைகளை நோக்கமடைந்த பகுதிகளில் பல்வேறு நோய்கள் முளைத்துக் கிளைபுவதைக்காண்கிறோம். உடலின்தோல் பகுதிகளில் ஏற்படும் நோய்கள் பற்றியே இங்கு கூறவிழைகிறோம்.

மக்கள் கருத்து

உடலின் உட்பகுதிகளில் சிறப்பாக இருதயம், தொண்டை, சிறுநீரகம், வாய், மூளை என்பனவற்றில்ஏற்படும் நோய்களுக்கு ஓரளவு வசதியான வைத்தியசாலை யாழ்ப்பாணத்திலுண்டு. ஆனால் சிறப்பு வைத்திய நிபுணர்களென வுள்ள பிரிவுகள் மிகவும் குறைவு. இதனால் ஏதோ ஒரு துறையில்நிபுணத்துவம்பெற்றவர்களின் ஆலோசனையையே பிறிதொரு நோய்க்கும் கேட்க வேண்டியுள்ளது. இந்நிலைமை மற்றுமாற்றியமைக்கப்படவேண்டும்.

என்னதான் அபிவிருத்தி-வளர்ச்சி- செழுமை பற்றிப் பேசினாலும், சாதாரணமாக உண்ண உணவின்றி நலியும் மக்கள்கூட்டத்தினரை அவர்களின் ஜீவனோபாய வாழ்வைச் சற்று உற்று நோக்கவேண்டும். வைத்தியதேவைகளுக்குப் பணமின்மை, உரிய காலத்தில் வைத்திய சிகிச்சை பெறுவதற்கு இயலாமை, போஷாக்குள்ள உணவு தானமை போன்ற நிலைமைகளைச் சற்றுக் கீழிறங்கி நோக்குதலானது யாழ்ப்பாணத்தை வாழ்வு பெறவும் வளம் பெறவும் செய்யத்தக்க செயலாகாமா

தற்போது பெருகிவரும் மக்களிடையே காசநோய் தனது செல்வாக்கினைச் செலுத்திவருகிறது. இது யாழ்ப்பாணத்து மக்கள் மத்தியில் கூடிய அளவில் குடிகொள்ளத்தொடங்கிற்று. ஏனெனில் பேசினாலும்-தொண்டைத்துழியில் ஏற்படும் அரிப்பினாலுந்தான் பெரும்பாலும் இந்நோய் உருவாகிறது. புகையிலை பாவித்தல், புகைத்தல் தாம்பூலந்தரித்தல், போன்றன இவை நடைமுறைகள். இப்பழக்கங்கள் தொன்று தொட்டே தமிழ் மக்கள் மத்தியில் நிலவியதாக வுள்ளன. இத்தொல்லையான நடவடிக்கைகளைக் கட்டுப்பாடிப்புக்குள்ளாகக் கூடாவறுப்பை நோயினிற்கு பாதுகாப்பது வலுவிரயமாகத்தான் நடவடிக்கையில் சற்றுமனக் கவத்து- திட்டமிட்டுச்செயற்படவாழ்ப்பாண மாநகரசபை மன்றமும் ஏனைய நிறுவனங்களும். பணம் படைத்தோரும் முன்வரவேண்டும் காசநோய் பற்றியதகவல்களைப் பொதுமக்கள் மத்தியில் பிரச்சாரம்செய்து சில பழக்க வழக்கங்களை இல்லாதளவு நிறுத்திக்கொள்ளப் பிரச்சாரம் செய்தல்வேண்டும். வெறுமனே ரீதியில் இதுபற்றிய சில விஞ்ஞான பூர்வ ஆலோசனைகளைப் பரவலாக்கவேண்டும்

நாம் நமது அதிகாரத்தையும், மக்கள் பலத்தையும் நல்ல பயன்தரு நடவடிக்கைகளில் இட்டுச்செல்ல முனையவேண்டும். வாழ்நாளோ குறுகியது வருநோயோ மிகப்பெரிது நாம் எடுக்கும் முக்கறையோ மிகக்குறைவு இப்போக்குக்கால வேகத்தில் பயணிக்க இளைஞர்களினால் மத்தியிலும் ஏற்படுதலாம் ஏனெனில் இளைஞர்களினால் இன்று பாடசாலைகளிலேயே போதைப்பொருட்களுக்கு, பிற தீங்கிழைக்கும் நடவடிக்களுக்கு ஆட்படுவிடுகின்றனர் தொழிலுடையோரும், தேவைக்கு வழக்கு ஒழுக்கங்களும் மிகவும் தீவிரமாகவே எம்மக்கள் மத்தியில் ஊடுருவிச்செறிந்துள்ள நோய்கள் வாழ்நாள் பூராவும் பாதிக்கப்படும் அவலத்தீர்ப்பதற்கு வசதி வறியோர் சாதாரண மனிதனுக்கு வழிகாட்டத்தான்வேண்டும். இதில் அவசியமாவது 'காசநோய்' - 'புற்றுநோய்' 'மேகநோய்' போன்றன வந்திருக்கு உட்பட்ட வைத்திய நிலையங்களையும் உபகரணங்களையும் பிற வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு நாமெல்லோரும் ஒருங்கிணைந்து செயலிக் குதிக்க வேண்டும். பல பயன்தரு திட்டங்களில் மனதை நிலை திருப்புவதன் மூலந்தான் நாம்நாட்டுக்கும், மக்களுக்கும்தொண்டு செய்தவர்களாக முடியும். எத்தப் பணியைச் செய்யவேண்டுமென்ற தீர்மானிப்பதிலேயே எதுதிறமையும்அற்றுமையும் தங்கியுள்ளது இதை ஒரு ஆரோக்கியமான தோரணை மக்களுக்குத் தன்னைத்துவம் வகிக்கும் கட்சியினரும், நிர்வாகத்தினரும் உணர்தல் வேண்டும். நமது கடமையிதுதான் நமது நாமம் வாழ்போகிறது நம்முன்னோர் பெருமையும் அவர்கள் காட்டிய வழியும் நமக்குரியதேதான். அவற்றை மீண்டும் மீண்டும் பல்முக நடவடிக்கைகளால் அழுத்துவதால் நமது மக்கள் மத்தியில் என்று நினைப்பதற்குச் சமனாகும். தனது தனிவனையும், தனது மொழியையும், முன்னுதாரணங்களையும் தேடிக்காணாத மனிதன் என்று கூறுவது முடியாது ஆனால் நாம் உருப்படியாக என்ன செய்துவிட்டுச் செல்கின்றோம் என்று ஒவ்வொருவரையும் உங்களுக்குள்ளேயே உங்கள் அந்தராத்மாவை கேட்டுக்கொள்ளவேண்டும். மாநகரசபைமன்றமும் நமது மக்களுக் எதில் அதிக வளம் செலுத்தப்போகிறார்களோ! வாழ்ந்தவர்களுக்குக் கிடையப்பதா? வாழப்போகிறவர்கள் உங்கள் வைக்க உதவி செய்வதா? என்பதுதான் பிரச்னையின் சாராம்சம்

க நாகேஸ்வரன்

80,000 தொன் மா கிடைக்கும்

(தொடர்பு)

மேற்கு ஜேர்மனியப் பாராளுமன்றத்து எண்பதினாயிரம் தொன் சோளமாவை 1970 டிசம்பர் மாதத்திற்குப் அடுத்த வருடம் பங்குனி மாதத்திற்குமிடையில் இலங்கை கொள்வனவு செய்யும். ஒரு தொன் சோளமாவை 275 டொலர் குறைவான 40,000 தொன் சோளமாவை மாதமொன்றிற்கு தேவைப்படுகிறது.

மேற்கண்டவாறு உணவு நிலைமைகளைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தபடி, அமெரிக்காவுடன் செய்து கொண்ட பி எல் 480 உடன் படிக்கையின் கீழ் இலங்கைக்கு 135,000தொன் சோளமாவை 1980ம் ஆண்டில் கிடைக்க இருக்கிறது

அமெரிக்காவுக்கிரவிக் கனுமதிய இதன் பொருட்டு பெற வேண்டியுள்ளதென்றார்.

அதிக பயன்தரும்

'இப்பில் - இப்பில்'

-- தலைவர் - யாழ். லயன்ஸ்கழகம் --

(லயன்ஸ்கழக ஆதரவில் இம்மாதம் 1-ந் திகதி முதல் 7-ந் திகதி வரை மரம் நாட்டு விழா அகில இலங்கை ரீதியில் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது)

பிறேஸில் நாட்டில் ஏற்பட்ட படுமோசமான கிறகுத் தாக்குப்பாட்டை மூன்று ஆண்டுகளில் நீர்த்து வைத்த 'இப்பில் இப்பில்' மரங்களை நாமும் இங்கு நாட்டிப் பயன் பெறுவோம்.

எவ்வாறான கொடிய வரட்சியையும் தாங்கி வளர்கூடிய மரமான 'இப்பில் இப்பில்' மரங்கள் அதிக்கும் இருமிகளிலிருந்தும் வண்டு போன்ற பூச்சி புளுக்களிலிருந்தும் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் தன்மை கொண்டது

மிகவும் வைரமுள்ள இந்த மரத்தை நாட்டி மூன்று ஆண்டுகளில் நாம் இதன் பயனைப் பெறமுடியும். 40 அடி உயரத்திற்கு வளர்ந்த பயன்தரும் இம் மரத்தின் இலைகளில் இருபத்தைந்து வீத புரதச்சத்து உள்ளது.

இந்த மரத்தின் இலைகளையும் துளிர்களையும் கோழிகளுக்கும் ஆடு, மாடு பன்றி போன்றவற்றுக்கும் உணவாகப் பயன் படுத்தலாம்

பிள்ளைக்கு, தயிர் ஆகியவற்றுடன் 'இப்பில் இப்பில்' இலைகளைச் சேர்த்தரைத்து ஆடு, மாடுகளுக்கு உணவாகப் போடுவதன்மூலம் சிறந்த பயனைப் பெறலாம்.

மிகவும் சிறந்த பசளையான இந்த இப்பில் இப்பில் மரத்தின் இலைகள் கொண்ட 5 முடைகள் ஒரு முடை உரத்துக்குச் சமானதாகும்.

எமது முன்னோர்கள், ஏன் இன்றைய விவசாயிகளில் அனேகர் தமது வயல்களிலும் தோட்டங்களிலும் இயற்கைப் பசளையான பச்சை இலைகளைப் போட்டு அதிக பயன் தமக்கும் நாட்டுக்கும் பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

இந்த ரீதியில் அதிக சத்து கொண்டதும் கூடுதலான பயனைத் தரக்கூடியதும் மிகவும் மலிவானதுமான 'இப்பில் இப்பில்' இலைகளை பசளையாக இடுவதன் மூலம் வேலும் கூடுதலான பயன் பெறலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு இந்த இலைகளை நைட்ரஜன், பொஸ்பரஸ், பொட்டாஸியம் ஆகிய இரசாயனப் பொருட்கள் உள்ளடக்கியுள்ளது

எமது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை மிகவும் இலகுவில் போக்க உதவும் இம்மரத்தின் கிறகுகள், விலையற்றதாகவும் மிகவும் மலிவானதே.

நாட்டுக் இடங்களில் பரந்து வளரும் இம்மரத்தை மூன்று ஆண்டுகளில் கிறகுக் காகவோ அல்லது மற்றும் தேவைகளுக்காகவோ தறித்த பின்னரும் கட்டை மீண்டும் அடிமரத்திலிருந்து துளிர்விட்டு விரைவில் மரமாகி பயன் தரத் தொடங்குகிறது

தரிசு நிலங்களில் பெருவாரியாக இம்மரங்களை நாட்டி இதன்மூலம் எமது வாழ்வுக்குத் தேவையான வருவாயையும்கூட நாம் தேடிக்கொள்ளலாம் தரிசு நிலங்களில் மட்டுமல்ல குடியிருக்கும் வளவுகளில் இதனை நாட்டுவதன் மூலமும் அதிக பயனைப்பெற முடியும்.

வரண்ட பிரதேசங்களில் இம்மரங்களை நாட்டி அம் மரங்கள் வளரும் அதேவேளையில் அந்த வரண்ட பூமியும் பண்படுத்தப்பட்டு வளம் கொழிக்கிறது.

"இப்பில் இப்பில்' மரத்தை இலைகளினூடாகஉறிஞ்சும்,"நைட்ரஜன்' அதன் வேர்கள் ஊடாக நிலத்தில் செறிவடச் செய்வதன்மூலமே வரண்ட பூமியும் வளம்கொழிக்க தொடங்குகிறது

ஆகவேதான் நாம் எல்லோரும் நாடெங்கிலும் இம்மரத்தை நாட்டி குறைந்த செலவில் அதிக பயனைப் பெறவேண்டும்.

இளைப்பெயர்கள் விதிவசம் செல்லுகொண்டிருந்தபோது அவர்களைப் பார்த்துக் கடன் கொடுக்க செய்த இருவருக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா?

பரிதாபமான இடத்தில் வைத்துக் கசையடி கொடுக்கப்பட்டதுடன் ஒரு வருடச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது

இது பாகிஸ்தானில் நடந்தது.

பாகிஸ்தானில் நடைபெறும் நிகழ்ச்சிகள் எல்லாமே மகிழ்ச்சியைத் தர முடியாதென்றாலும் சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்கு இதுபோன்ற தண்டனைகள் விதிக்கப்படுவது வரவேற்கக்கூடியதே

"ஓரம்போ, ஓரம்போ" என்ற கினிராப் பாட்டை ஒலிபரப்புவதற்கு இந்தியாவில் வானொலிக்குத் தடை விதித்திருக்கிறார்கள் இவர்கள் வானொலியில் இந்தப் பாட்டைத் தினமும் கேட்கலாம். இந்தியாவில் என்ன காரணத்துக்காகத் தடை விதிக்கப்பட்டதோ தெரியவில்லை. இங்கும் இந்தப் பாட்டை ஒலிபரப்புவதற்குத் தடை விதித்தால் நல்லதென்றே தோன்றுகிறது விதியில் இளைப்பெயர்களையும் மரணங்களையும் கண்டதுக் கிலரிக் வரும் "ஓரம்போ, ஓரம்போ" (ஓரமாய் போய்க்கொண்டிருப்பவர்களிடமும் கூட) என்று சொல்வதில் மகிழ்ச்சி காண்கிறது.

பண்பாடுபற்றிப்பேசும் நமது பகுதியில் விதியில் பெண்களைக் கேலி செய்யும் பழக்கம் இப்போது மிகவலிந்து விட்டது. இதற்குச் கினிராவை முக்கிய காரணம் என்று சொல்லலாம். ஒரு சமுதாயம் உரிமைகளைப் பெறுவதற்குவிடுதலை பெறுவதற்கு முதல் சீர்திருத்தம் பெறவேண்டியது அவசியம்

பதுக்கலுக்கும் கொள்ளை லாபத்துக்கும் பாகிஸ்தானில் முப்பது கசையடிகள் வரை தண்டனை விதிக்கப்படுகிறது. இத்தண்டனையும் பகிரங்கமான இடத்திலேயே வழங்கப்படுகிறது இந்தக் கசையடித் தண்டனைச் செய்திகள் தினமும் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன இதன் பின்னரும் பதுக்கலும் கொள்ளை லாபமும் நின்று விடுமாறுமுடியுமா?

0 0 0

சில தினங்களுக்குமுன் காலமான பிரபல நாதஸ்வர வித்துவான் குளிக்கரைப் பிச்சையப்பா 1950ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் மிகச்சிறப்பாக நடந்த செல்லக் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் தமிழ் விழாவுக்கு வந்திருந்தார்

கூறிய விழாவைப்பற்றி பின்னர் 'தெய்வதரிசனம்' என்ற தலைப்பில் அவர் 'கல்கி' எழுதுகையில் அந்த விழாவுக்கு மக்கள் காட்டிய ஆர்வம் பற்றிக் குறிப்பிடுகையில், விழாவுக்கு முதல்நாள் கிளர் அவரை அவரமாக வந்து "பிச்சைக்காரக்குளிப்பயர வந்துவிட்டாரா?" என்று கேட்டார்கள் என்று எழுதினார்

ஊர்சுற்றி.

"நீண்டகாலத்தின் பின் தோடிராகம் கேட்டேன்"

நாதஸ்வரம் பத்மநாதனுக்கு ஐயாக்கண்ணு தேசிகர் பாராட்டு

(அரியாலை)

"நீண்டகாலத்திற்குப் பின் உண்மையான தோடியைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது நாதஸ்வர மேதை திரு என். கே. பத்மநாதன் தோடி இராகத்தை மிகவும் இலாவகமாவும், சுத்தமாகவும் தோடியின் உயிர்ப்பு விளங்க மிகவும் அபாரமான முறையில் இன்று வாசித்து எம்மை மெய்மறக்கச் செய்துவிட்டார்"

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற நாதஸ்வர இசைக்கச்சேரியில் உரையாற்றிய முதுபெருஞ்சங்கீத கலாநிதி திரு: ஏ. ஜி ஐயாக்கண்ணு தேசிகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "திரு. பத்மநாதன் நாதஸ்வர வாத்தியத்திற்கு மிருதங்க மேதை திரு கி. எல் முருகபூபதியிடம் கிட்டாத பெற்று வந்த திரு. பொன். சுந்தரத்தை மிருதங்கம் வாசித்து அரங்கேற்ற வைத்தமை பாராட்டுரியது" என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த சட்டத்தரணி கி. பொன்னையா பேசுகையில் "தற்போது தரமான நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாது என்றும் நிகழ்ச்சிகளைக் கட்டுத்தரமாக நிகழ்ச்சிகளை ஒரு வியாபாரச் சொத்தாக்கி விட்டது என்றும் கூறினார்

நிகழ்ச்சிகளைக் கட்டுத் தரமாக்கும் இந்நாட்டுக் கலைஞர்களின் வளர்ச்சிக்கு உதவ நாமிக்க. வெளிநாட்டுக் கலைஞர்களை இதை ஒத்துக் கொள்வர். அதுவுமல்லாமல்

(4-ம் பக்கம் பார்க்க)

சரவணையில் சமய தீட்சை

(சரவணை

சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தில் கடந்த வாரம் சமய தீட்சை நடைபெற்றது

ஆலய பரிபாலன சபையின் ஆதரவில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இருநூற்றுக்கு மேற்பட்டோர் தீட்சைபெற்றனர்

பிரதிஷ்டா கலாநிதி சிவத்திரு. சோமஸ்கந்தக்குருக்கள் தீட்சையைநடாத்திவைத்தார்

ஹவானாவில் இரகசிய ஒப்பந்தம் எதுவும் உருவாகவில்லை!

இந்தியப் பிரதமர் விளக்கம்

[illegible], நவ 1

பாரிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்குக்கும் இந்திய வெளிநாட்டு அமைச்சர் மிஷ்ராவுக்கும் [illegible] ஹவானாவில் எதுவும் இரகசிய ஒப்பந்தமும் செய்யப்படவில்லை.

இந்திய-பாக் எல்லை மீதான போர்ஒன்றை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கு[illegible] [illegible] செய்யும் [illegible] [illegible] கொண்டிருக்கவோ அப்படியான [illegible] நடத்தவோ [illegible]

இவ்வாறு இந்திய பிரதமர் [illegible] பட்ஜூவில் நடைபெற்ற கட்டத்தில் பேசும்போது கூறினார்

தேர்தல் ஒத்திவைக்கப்படுமென்ற பேச்சுக்கே இடமில்லை

இந்த விசித்திரமான பேச்சை [illegible] எப்பதை இப்போது உணரமுடிகிறது என்றும் அவர் கூறினார். (இ)

80-ம் ஆண்டு ஆசியாவில் படுமோசமான பஞ்சம்

ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

புதுடில்லி, நவ 1

ஆசிய நாடுகளில் 1980ம் ஆண்டுகளில் படுமோசமான பஞ்சம் நிலவுமென்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது

இதைச் சமாளிக்க இந்த நாடுகள் ஆயத்தமாகுமென்றும் இந்த எச்சரிக்கை [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் [illegible] வரட்சி காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்படலாமென்றும் வங்கியின் அறிக்கை [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது

மக்கள்தொகை கணிசமாக அதிகரித்து வருவதாக 60ம் ஆண்டுகளில் இந்த நாடுகளில் [illegible] பசுமைப் புரட்சி [illegible] [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

வயலில் உள்ள களைகளைக் கட்டுப்படுத்தியதால் நான் பெருவாரி விளைச்சலைப் பெற்றுக் கொண்டேன்

● ஒரு முறை மாத்திரமே உழவேண்டியதால் இருமுறை உழுவதற்கு போகும் செலவு மிகுதியாகிறது ● எல்லாக் களைகளையும் கட்டுப்படுத்துகிறது. ● நிலத்தை இழகப்பண்ணி மண்ணில் உள்ள பசனையைப் பாதுகாக்கின்றது.
● கிரமக்சோன் பாவித்தால் வருடத்தில் மூன்றுமுறை பயிர் செய்ய முடியும்.

கிரமக்சோன் முறையைப்பற்றி மேலும் விபரங்கட்டு எமக்கு எழுதுங்கள்.

இத்துடன் இணைக்கப்பட்ட கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பவும். உங்களுக்கு வேண்டிய உதவிக்கு எமது சேவையாளரை அனுப்புவோம்.

கூப்பன்
பெயர் .....
விலாசம் .....
.....
வேண்டிய சேவைகள் .....
.....

©G

CIC
கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 352 கொழும்பு 1

விமானம் விழுந்து நொறுங்கி 90 பேர் பலி!

மெக்ஸிக்கோவில் கோரச்சம்பவம்

[நியூயோர்க், நவ 1

அமெரிக்காவில் டி. கி. 10 விமானமொன்று மெக்ஸிக்கோ விமானநிலையத்தில் விபத்துக்குள்ளானபோது அதிலிருந்த 90 பேரும் பலியானார்கள் என அறிவிக்கப்பட்டது

நேற்று அதிகாலை வேளையில் தரையிறங்கிய இந்த விமானம் ஓடு பாதையிலிருந்து விலகி எதிரேவந்த டிரக்வண்டியுடன் மோதியபின் [illegible] தரையில் நிலைகுலைந்து [illegible] மோதியதாக.

அமெரிக்க மேற்கு 'ஏவர் லைன்ஸ்' கம்பனியைச் சேர்ந்த இந்த வாடகை [illegible] அமர்த்தப்பட்ட விமானம் லாஸ்ஏஞ்சல்ஸிலிருந்து மெக்ஸிக்கோ வந்தது

விமான ஓடு பாதையில் [illegible] இடம்பெற்றதாக [illegible] எச்சரிக்கையையும் மீறி மூடுபனியில் மறைந்திருந்த ஓடு பாதையில் இறங்கியபோதே இவ்விபத்து ஏற்பட்டதாக. (இ)

சோமாலிய கப்பல் விபத்து

மாஸ்கோ, நவ 1

இரு சோவியத் கப்பல்கள் நடுக்கடலில் மோதிக்கொண்டதில் ஒரு கப்பல் தீப்பிடித்து எரிந்துபோயிற்று இருகப்பல்களிலுமிருந்த பிரயாணிகளும் ஊழியர்களுமாக 90 பேர் [illegible] மேலும் பலர் தேடப்பட்டுவருகின்றனர். (

ரயில் விபத்து 50பேர் பலி!

மெட்ரவுன், நவ 1

[illegible] இடம்பெற்ற ரயில் விபத்தில் 50 பேர் பலியானார்கள். 30 பேர் [illegible] காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (

துரையப்பா விளையாட்டரங்கு

[illegible] றைய தீர்மானத்தை ஆதரித்த இன்றைய உறுப்பினர்கள்

மேயர் வெளியிட்ட தகவல்

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாண [illegible] விளையாட்டு அரங்கிற்கு துரையப்பா விளையாட்டு அரங்கு என்று பெயர் சூட்ட 66ம் ஆண்டு கொண்டுவந்த பிரேரணைக்கு இன்று இச்சபையிலுள்ள உறுப்பினர்களான திரு [illegible] புஸ்பராஜா, திரு ஏ துரைராஜசிங்கம், திரு எஸ் ரி செல்லத்துரை [illegible] ஆகியோர் ஆதரித்து வாக்களித்தார்கள்"

யாழ் மாநாகரசபைக் கட்டத்தில் ஜனாப் மீ மு காதிர் கேட்ட கேள்விகளுக்கு யாழ் நகர முதல்வர் திரு இராசா விசுவநாதன் மேற்கண்டவாறு பதிலளித்தார்

திரு இராசா விசுவநாதன் மேலும் கூறியதாவது:

"17-5-66ல் நடந்த கூட்டத்தில் 7 தீர்மானங்கள் அப்போதைய உறுப்பினர் திரு கே ஏ தெய்வேந்திரன் யாழ் விளையாட்டு அரங்கிற்கு பெயர் துரையப்பா விளையாட்டு அரங்கு என்று மாற்ற வேண்டும் என்ற பிரேரணையை கொண்டுவந்தார் அத்தீர்மானத்திற்கு இன்று இச்சபை உறுப்பினராக உள்ள திரு புஸ்பராஜா, திரு ஏ துரைராஜசிங்கம், திரு எஸ் ரி செல்லத்துரை ஆதரவாக வாக்களித்தனர். [illegible] மூவரும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களாக நடந்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டவர்

மாநகரசபைக் கூட்டத்தில் எழுந்த சட்டப்பிரச்னை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை கட்டத்தில் கேள்விகளுக்கு மாநகரசபை உத்தியோகத்தர் ஒருவர் பதிலளித்துக் கொண்டிருந்தபோது சட்டப்படி கேள்விகளுக்கு மாநகரசபை முதல்வரே பதிலளிக்க வேண்டும் என்று டாக்டர் ஏ எஸ் ஏபிரகாம் கேட்டபின ஒழுங்குப்பிரச்னை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன்பின் மாநகர முதல்வரே குரல் பத்திலிருந்து கேள்விகளுக்கு பதிலளித்தார்.

உறுப்பினர் ஜனாப் மி மு. காதிர் கேட்ட [illegible] கேள்விகளுக்கு மாநகரசபை உத்தியோகத்தர் ஒருவர் மேலுக்கு [illegible] பதிலளித்துக் கொண்டிருந்தபோது டாக்டர் ஏ எஸ் ஏபிரகாம் ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்.

ஏ துரைராஜசிங்கம்: [illegible] ஆக்கினத்தில் இருக்கிறது.

டாக்டர் ஏ எஸ் ஏபிரகாம்: சட்டப்படி கவுன்சிலர் மேயரே பதிலளிக்கவேண்டும்.

நகரமுதல்வர்: கடந்த நடந்த இடையூறு கேள்விக்கு பாரதூரமான நடவடிக்கை எடுப்பேன். நான் எழுதிய பதிலையே அவர் படிக்கிறார்;

ஏ எஸ் ஏபிரகாம்: ஒவ்வொரு பதிலுக்கும் மாநகரசபை முதல்வரால் அளிக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

மீ மு காதிர்: சட்டப் புத்தகம் இருக்கிறது.

[illegible]: நான் சட்டம் படிக்காவிட்டாலும் எனக்கு சட்டம் தெரியும்.

[5-ம் பக்கம் பார்க்க]

நீண்ட...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டுத்தயாரிப்பிலும் [illegible] திரைப்படங்கள் இந்நாட்டுக் கலைஞர்களின் படங்களின் நன்னடிப்பைப் பாராட்டுமென்பதில் ஐயமில்லை.

நல்ல தரமான தமிழ்ப் படங்களை இந்நாட்டுக்கு வருவிப்பது திரையிட இரசிகர்களை திருப்திப்படுத்தாது மல்லாமல் இந்நாட்டுக் கலைஞர்கள் தமது தரத்தையும் உயர்த்துவதற்கும் பெரிதும் உதவியாகவிருக்கும். முன்பு போல் நல்ல படங்களை இங்கு வருவிப்பதற்கான வழிவகை அரசு [illegible] என [illegible] கூறினார்.

நல்ல ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் பேசுகையில், இளம் மிருதங்கக் கலைஞர் பொன் கலைவாணர் தமது [illegible] மிருதங்கம் வாசித்துக் [illegible] எனறு தெரிவித்தார்.

ஜெயப்பிரகாஷ், ஜோசப் மறைவுக்கு யாழ். மாநகரசபை இரங்கல்

(யாழ் பாணம்)

இந்திய சர்வோதயத் தலைவர் அமரர் ஜெயப்பிரகாஷ் நாராயண் மரணம் குறித்து யாழ்ப்பாண மாநகரசபையில் அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேறியது.

திரு. இராசா விசுவநாதன் பேசுகையில், தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணின் மனித உரிமைக்காக, ஜனநாயகத்தை கைப்பிடித்தவரென்றும், மக்கள் கஷ்டங்கள் தீர பெரும் முயற்சி எடுத்தாரென்றும் கூறினார்.

திரு. சண்முகராசா பேசுகையில் சத்தியவழியில் பாடுபட்டு மக்களுக்கு உழைத்தாரென்றும் 1967ம் ஆண்டு அரசியல் விட்டு விலகி சர்வோதய உலகில், விநோபாஜியுடன் சேர்ந்து உழைத்தாரென்றும் கூறினார்

திரு ஏ. துரைராஜசிங்கம் பேசுகையில், பூதான இயக்கத்தில் அவர் ஈடுபட்டு, ஏழை மக்களுக்கு நிலம் வழங்கினார் என்று கூறினார்.

முன்னாள் யாழ் விசேட ஆணையாளர் அமரர் ஏ ஏ ஜோசபின் மறைவு குறித்துக் அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில்; அமரர் ஜோசப், இம் மாநகரசபையில் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் சேவையாற்றி மக்களுக்காக உழைத்தாரென்றும், மக்கள் எந்த நேரமும் அவரைச் சந்திக்கக் கூடியதாக இருந்தாரென்றும், மக்களின் கஷ்டங்களை அறிந்திருந்தாரென்றும் கூறினார்.

இத் தீர்மானத்தை அஞ்சலிக் குறிப்பாக குடும்பத்தினருக்கு அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது. [ம]

"சபை நடவடிக்கைகளை வெளியார் எவரும் கட்டுப்படுத்த முடியாது!"

[யாழ்ப்பாணம்]

இச்சபையை வேறெந்தத் தனிநபரோ நிறுவனங்களோ கட்டுப்படுத்த முடியாதென யாழ் நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் நேற்று முன்தினம் கூறினார்

யாழ் மாநகரசபைக்குப்பின் ஜனாப் மீ மு காசிம் கேட்ட கேள்விகளுக்கே, நகரமுதல்வர் திரு இராசா விசுவநாதன் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

நகரமுதல்வர் மேலும் கூறியதாவது: "சபையை கட்டுப்படுத்த முடியாதென்றார். எவரால் கட்டுப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுகிறது. இச் சபையில் நடவடிக்கைகளை தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு இணங்க கட்டுப்படுத்த முயற்சிக்கும், நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க இச்சபைக்கு உரிமையுண்டு என்றும் கூறினார். [ம]

ஒஸ்மானியா பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாணம், ஒஸ்மானியாக் கல்லூரியின் பெயரை எக்காரணம் கொண்டும் கல்வி அமைச்சு மாற்றாமல் தொடர்ந்து, கல்லூரியின் பெயர் ஒஸ்மானியாக் கல்லூரி என்றே இருக்கவேண்டுமென ஒஸ்மானியாக் கல்லூரி அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டம் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது: யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சே. மகேஸ்வரஐயர் கல்வி அதிபதியின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்: [சே-ம]

மாநகரசபை...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நகரமுதல்வர்: கேள்விகளுக்கு நான் பதிலளிக்கிறேன். இச் சட்டத்திற்படி இடையில் எவரும் கேள்வி கேட்கக்கூடாது

இதனைத் தொடர்ந்து நகர முதல்வர் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

நாகம்ஸ் (கல்லூரி)
தினசரி 6-30, 9-30.
சனி, ஞாயிறு 2-30
வெகுமார்-பத்மினி
சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன்

RIO Jaffna Phone: 7607
Daily 10-30 a m 4-45, 7-00 & 9-30 p.m.
CONVOY

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சாவித்திரி
கைகொடுத்த தெய்வம்

RAJAH A JAFFNA
Daily at 10-30 a m. 2-00, 4-30, 7-00, & 9-30 p.m.
PETER FONDA IN
FIGHTING MAD
(F)பைட்டிங் மாட்
(Color by Deluxe)
(Strictly for Adults)
(பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்)

REGAL (Jaffna) Daily at 2,00, 4-30, 7-00 & 9-30 p.m. only
The Long Awaited APACHE War film in Techni Color
The only thing that made them alike was the difference between them
BURT LANCASTER in
ULZANA'S RAID
Co-starring: BRUCE DAVISON - RICHARD JAECKEL
A Universal Picture
One man alone understood
The early savagery of the
Early American West
R RESTRICTED
Under 17 years requires
Accompanying parent or Adults

5-வது ஜனத்திரள் வாரம்
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன், மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.
முக்தா பிலிம்சாரின்
அந்தமான் காதலி
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)

5-வது ஜனத்திரள் வாரம்!
ஸ்ரீதர் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம்
சிவாஜிகணேசன்
நடிப்புச்செல்வி
சுஜாதா
விஜயகுமார்,
அறிமுகம் சங்கீதா, ஜாகேஷ், சத்தியப்பிரியா
சுந்தரராஜன் மற்றும் பலர் நடித்த
இசை: இளையராஜா (வர்ணக் கலர்) வள்ளிவிழாச் சித்திரம்
தீபம்

வெற்றி முழங்கும் 3வது ஜனத்திரள் வாரம்!
மக்கள் கலைஞர் - ஜேம்ஸ் பொன்ட் - ஜெய்சங்கரின்
150-வது வெற்றிப் படைப்பு
சாந்தி யாழ்நகர். போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜெய்சங்கர் ● ஸ்ரீதேவி ● ஸ்ரீகாந்த் ● அசோகன்
எம் ஆர் ராதா ● மனோரமா ● சுருளிராஜன்
பாக்ஸிடிரைவர்
சண்டைக்காட்சிகள் நிறைந்த வண்ணப்படம்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 8 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா
நீதிக்கு தலைவணங்கு (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பணத்தோட்டம்

TODAY ONLY
RANEE [Jaffna] Daily at 10-30 a. m., 2-30, 4-30, 7-00 & 9-30 p.m
After its record breaking run in Colombo now comes to entertain you.
The most eagerly awaited Film
The Best War Film to be released after a lapse of several years
OPERATION DAY BREAK
(One of the True great adventure story of our time.)
From 4-11-79
THE EXORCIST
(Adults only)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப. 2-30 6-30, 9-30
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
பாக்தாத் பேரழகி
(இலங்கை பிரதி)

183 பேர் பலியான விமான விபத்துக்கு

போக்குவரத்து விதிகள் சரியாகப் பின்பற்றாமையே காரணமாம்

(கொழும்பு)

கடுநாயக்காவுக்கு அருகில் கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற 183 பேர்களைப் பலிகொண்ட விமானவிபத்திற்கு விமானப் போக்குவரத்து விதிகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படாததே காரணம்.

இவ்வாறு கடந்த நவம்பரில் இடம்பெற்ற விமானவிபத்துக் குறித்து விசாரணை நடத்திய தனிநபர் கமிஷன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர் கமிஷனின் உறுப்பினராக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தமது அறிக்கையை [உக்கிரேனியாவூர் வசிக்க வெளியிட்டார்.

கடந்த வருடம் நவம்பரில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இறங்குவதற்கு சில நிமிட நேரத்திற்கு முன் விழுந்து நொறுங்கிய ஐம்பொன்ற ஏயர்லங்கா விமானத்தில் பிரயாணம் செய்த 183 பேர் மரணமானது தெரியவந்ததே.

விமானம் பறக்கவேண்டிய திசை, உயரம் ஆகிய தகவல்களைத் தெரிவிப்பதற்காக விமானநிலையத்தில் தொடர்ச்சியாக விசாரணை இருக்கக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நீதியரசர் திரு. சிவசுப்பிரமணியம் தமது அறிக்கையில்பார்சுசெய்துள்ளார். [இ]

மன்னர் ஹஸன் ஆட்சி 80க்குள் கவிழ்ந்துவிடும்!

சி. ஐ. ஏ. ஆருடம்

(வாஷிங்டன்)

"மொரோக்கோ மன்னர் ஹஸன் மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார். 1980-க் ஆண்டுக்குள் அவரது ஆட்சி கவிழ்ந்துவிடும்" என்று அமெரிக்காவின் மத்திய உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ. ஆருடம் கூறியுள்ளது.

மொரோக்கோ மன்னர் ஹஸனின் எதிர்காலம் பற்றி சி. ஐ. ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"ஒருவருட காலத்துக்குள் மன்னர் ஹஸன், தமது கட்டுப்பாட்டை இழந்து அவரது ஆட்சியும் கவிழ்ந்துவிடும். கவிழ்ந்துவிடக் சூழ்நிலை உருவாகியுள்ளது மொரோக்கோ மன்னர் ஹஸனுக்கு மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார். 1980-க் ஆண்டுக்குள் அவரது ஆட்சி கவிழ்ந்துவிடும்" என்று சி. ஐ. ஏ. கூறியுள்ளது.

மொரோக்கோ மன்னர் ஹஸனின் எதிர்காலம் பற்றி சி. ஐ. ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"ஒருவருட காலத்துக்குள் மன்னர் ஹஸன், தமது கட்டுப்பாட்டை இழந்து அவரது ஆட்சியும் கவிழ்ந்துவிடும். கவிழ்ந்துவிடக் சூழ்நிலை உருவாகியுள்ளது மொரோ

இன்றைய பலன்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மீனம்: பிறரிடம் தங்களிடமிருந்து வேதனையைத் தரலாம். கருடன் பார்வை உங்களை வட்டமிடும். உஷார் நிலையில் இருப்பது விருப்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பாரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச்செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின்எப்ப நதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி! 8154

பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

அமரர் வன்னியசிங்கம் சிலை அமைக்க

இடம் ஒதுக்கும் தீர்மானம்: சபையில் நடந்த விவாதம்

[யாழ்ப்பாணம்]

அமரர் திரு. கு. வன்னியசிங்கத்திற்கு சிலை நிறுவ யாழ் நகரில் இடம் ஒதுக்க வேண்டும் என்ற தீர்மானம் நேற்று முன்தினம் யாழ். மாநகரசபையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிய தகவல்: அத்தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தின் சுருக்கத்தை நமது நிருபர் இங்கு தருகின்றார்.

யாழ். மாநகரசபை முதல்வர் திரு இராசா விசுவநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில், பல்வேறு விவாதத்திற்குப் பின் திரு. தம்பு கந்தையா கொண்டுவந்த திருத்தத்துடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அமரர் வன்னியசிங்கத்திற்கு சிலை எழுப்ப வேண்டும் என்றும், அச்சிலையை முனிஸ்வரன் வீதி முச்சந்தியில் அமைக்க இடத்தை தத்துவவேண்டும் என்றும் திரு. எஸ். ரி. செல்வத்துரை ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்.

ஜனாப் மி. மு. காசிம்: அமரர் வன்னியசிங்கத்திற்கு சிலை அமைக்க வேண்டுமென அமரர் செல்வநாயகம் கட்சியினர் கூறினார் என பிரேரணையில் கூறப்பட்டுள்ளது. அமரர் செல்வநாயகம் என்னியது திரு. எஸ். ரி. செல்வத்துரைக்கு எப்படித் தெரியும்?

மாநகரமுதல்வர்: அவர் நெருங்கிய பழகியிருப்பார். நீர் அப்படிப் பழகவில்லை. அதனால் தெரியும்.

திரு. ஏ. துரைராஜசிங்கம்: அமரர் வன்னியசிங்கம், தமிழ் பேசும் மக்களுக்காக தமது உயிரைத் தியாகம் செய்தவர். சில தலைவர்கள் மத்திரிபதவியில் இருக்காலத்திருப்பதும், பச்சோந்தியும், கொப்பாகவும் மாறுவது வழக்கம். ஆனால் அமரர் வன்னியசிங்கம் கொண்ட கொள்கையில் விருந்து கடைவரை விலகாமல் தமிழ் மக்களுக்காக உழைத்தார்.

அமரர் வன்னியசிங்கத்திற்கு போல, கட்டணிக் கட்டுத்

அமரர் கு. வன்னியசிங்கத்துக்கு யாழ். நகரில் சிலையமைக்க இடம் ஒதுக்குவதற்காகத் தீர்மானித்ததை திரு. என். ரி. செல்வத்துரையே சமர்ப்பித்திருந்தார். திரு தம்பு கந்தையா அத்தீர்மானத்திற்குத் திருத்தம் ஒன்றையே கொண்டுவந்தார். நேற்றைய 'ஈழநாடு' இதழில் இது தவறுகப் பிரசுரமாகியிருந்தமைக்கு வருந்துகின்றோம். ஆ-ர்.

தலைவர்களான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், அமரர் திருச்செல்வம் போன்ற தலைவர்களுக்கு சிலை எழுப்ப எமது முழு ஆதரவுண்டு. நாமும் மக்கள் பிரதிநிதிகள் என்னுக்கு வாக்குரிமையுண்டு. நாம் சுதந்திரமாக வாக்கிடவேண்டும். ஆதலால், மாநகர முதல்வர் இத்தீர்மானத்தையும், முன்புபோல் தட்டிக்கழிக்காமல் அமரர் வன்னியசிங்கத்திற்கு சிலை நிறுவ இடம் ஒதுக்க வேண்டும்.

திரு. எஸ். திருச்சந்திரன்: அமரர் வன்னியசிங்கம், தமிழரசுக் கட்சியில் ஆரம்பகாலம் தொட்டு, இணைந்தேயிருந்து தொண்டாற்றி உத்தமனாக விளங்கினார்.

58ம் ஆண்டு வெள்ளத்தில் பொது மக்களுக்கு முன்னிலையில், இந்துமக்களுக்கு எல்லாவேலை உதவிகள் செய்தார். போகமுடியாத இடங்களுக்கு சென்று உதவியது எனக்குத் தெரியும். அமரர் செல்வா அவருக்கு சிலை நிறுவ எண்ணியிருந்தார் என்பது எங்களுக்குத் தெரியும். மன்னிலையில் பொன்சிலை அமைக்கவேண்டும்.

ஜனாப் மி. மு. காசிம்: மற்ற வர்களைப்போல் எங்களுக்கும் பேச உரிமையுண்டா? பேசலாமா?

நாமுதல்வர்: பேசலாம்.

ஜனாப் மி. மு. காசிம்: அமரர் வன்னியசிங்கம் மக்களுக்குச் சேவையாற்றியிருக்கலாம். ஆனால் அன்னாருக்குச் சிலை எழுப்புவதற்கு நானும் எனது தமிழ் காங்கிரஸ் கட்சியும் மாறு. இது பதிவுப்படவேண்டும்.

மாநகர முதல்வர்: இதனை உங்கள் தலைவர்களை கூற வேண்டும்.

ஜனாப் மி. மு. காசிம்: தலைவர் சார்பாக நான் கூறுகிறேன். நாங்கள் அத்தீர்மானத்திற்கு மாறு.

டாக்டர் ஏ. எல். ஏபிராஹாம்: தந்தை செல்வநாயகம் என்னியிருந்தார் என்பதை விருப்பியிருந்தார் என்று மாற்றலாம். தலைவர் ஒருவர் மத்திரிபதவியிலிருந்தார் என்று கூறப்பட்டது. 4 தமிழர்கள் மத்திரிகளாக இருந்திருக்கிறார்கள். யாரைச் சொல்லுகிறோம் தெரியாது அமரர் ஜி. ஜி. யை கூறியிருப்பார் என நினைக்கிறேன்.

திரு. ஏ. துரைராஜசிங்கம்: அப்படியில்லை.

டாக்டர் ஏ. எல். ஏபிராஹாம்: பெயர் மாற்றம். சிலை பதிவு பிரேரணையை முன்னாள் மாநகரமுதல்வர் பிலிப்போடுப்படி ஆலோசனை கூறியுள்ளார். அதே போல் இப்பிரேரணையையும் பின்போடும்படி ஆலோசனை கூறுகிறேன்.

சிலை நிறுவுவதற்குத் தீர்மானமா? அல்லது சிலை நிறுவ இடம் ஒதுக்குவதற்கா? என்பதை அறிய வேண்டும்.

மாநகர முதல்வர்: இரண்டு பிரச்சினைகள் உண்டு.

திரு. எஸ். ரி. செல்வத்துரை: [illegible] இடம் ஒதுக்குவதற்குத்தான் இப்பிரேரணை.

திரு. குமாரவேல்: அமரர் வன்னியசிங்கம் அறங்காவலர் குழு, நல்ல நிறுவ ஏற்பாடு செய்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி நிதியளித்துள்ளார். ஆதலால் சிலை நிறுவ இடம் ஒதுக்கவேண்டியது அவசியம்.

மாநகர முதல்வர்: அமரர் வன்னியசிங்கத்திற்கு சிலை அமைக்கவேண்டும் என கேட்கிறார்கள். அவர் அந்தக் காலத்திலேயே தீண்டாமை ஒழிப்பை செயலில் காட்டியவர். தீண்டாமைக்கு எதிராகப் போராடியவர். ஆதலால் அவருக்குச் சிலை எழுப்ப வேண்டும் என்ற தீர்மானம் இச்சபையில் ஏகமனதாக நிறைவேற வேண்டும்.

திருமதி சுவரமிநாதன்: முற்போக்கு விஷயங்களில் மேலோங்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். எங்கள் முழு ஒத்துழைப்பும் உண்டு. ஆனால், சில இங்கு மேடைப் பேச்சாளர் போன்று சபையில் பேசிவருவது எங்கள் மனதை புண்படுத்துகிறது.

மேயர்: இனிமேல் அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்வோம்.

அமரர் வன்னியசிங்கத்திற்கு சிலை அமைக்க முனிஸ்வரன் முச்சந்தியை [ஒதுக்க நேற்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. [ஈ]

'சுபத்திரன்' காலமானார்

[மலைநாடு]

மலைநாட்டைச் சேர்ந்த கவிஞர் 'சுபத்திரன்' (எஸ். தம்பையா) நேற்றுமுன்தினம் காலமானார். 1960ம் ஆண்டளவில் மிகவும் பேசப்பட்ட கவிதைகளைப் பாடிய இவர் ஒரு முற்போக்குக் கவிஞராவார். சமூகப்பார்வையுடன் கூடிய இலக்கிய முயற்சியிலும் ஈடுபாடு பல்கலைக்கழகத்தவர்.

இன்று க்ஷயரோக கொடித்தினம்

[மாவிட்டபுரம்]

வலி-வடக்கு - தெற்கு க்ஷயரோகத் தடுப்பு அமைப்பின் ஆதரவில் க்ஷயரோக கொடித் தினம் இன்று கல்லூரியில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. சுன்னாகம் சந்தைப்பகுதியில் கல்லூரி இளைஞர் வலிகி முயலவுள்ளார். இக் கொடித்தினத்தை ஆரம்பித்து வைப்பார்.

இவ்வைபவத்தில் காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ. தெய்வேந்திரன், வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு சோ. மகாதேவா, வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஜெயநாயகம் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

பரீட்சைத் தினைக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி பயிலும்போது தொழிற் கல்வியிலும் கடிய கவனம் செலுத்தவேண்டும்.

தமிழ் மக்களின் சரித்திரமும் வரலாறும் மாற்றி அமைக்கப்பட்டுவருகிறது. கடந்த காலத்தில் தமிழ்மக்களின் சரித்திரமும் வரலாறும் சரியான முறையில் எழுதப்படவில்லை. அதனால் தமிழ்மக்களின் சரித்திரத்தையும், வரலாறையும் மாணவர்கள் பூரணமாக அறிந்து புதிய சரித்திர வரலாற்று நூல்கள் எழுத வரலாறு சரித்திரம் கற்கும் மாணவர்கள் முயற்சிக்கவேண்டும்.

இவ்விந்தியாலயத்தில் கடுதலான பெண்பிள்ளைகளே பரிசில்களைப் பெற்றுள்ளனர். இந்நாட்டில் முன்னேற்றத்தில் பெண்களின்பணி முக்கியமானது. பெண்கள் எவ்விடயத்தை எடுத்துக்கொண்டாலும் சிறப்படச்செய்வார்கள் என்பதற்கு இங்கு நடைபெற்ற பரிசளிப்பில் பெண்கள் கடுதலாகப் பரிசுபெற்றதிலிருந்தே அறியக்கூடியதாக இருக்கிறது.

உலக அரசியலில் தலைசிறந்த தலைவர்களாக விளங்கிய தலைவர்களான ஜவஹர்லால்நேரு, விஞ்சை சேர்சில் போன்றவர்கள் பாடசாலையில் கல்விற்ற வேளையில் பாடசாலையில் ஒரு பரிசுகூடபெறவில்லை. அதற்காக அவர்கள் எல்லாம் திறமைசாலிகளில்லை என்றுகூறிவிட முடியாது. எனவே பரிசுபெறாத மாணவர்களும் வாழ்க்கையில் முயற்சிசெய்தால் முன்னுக்கு வரமுடியும் என்றார். [கோ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் வீதியில் இலக்கம் 61-ல் இயங்கும் அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. GB/3948/78 The Eelanadu P B No. 49 Telegram Eelanadu
T'Phone: 389